**O.S.No.44/2022**

பி.வா.சா.1, திரு.காசிம் சேட்
நாள் :16.02.2026 நேரம் : 11.05 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)எனது எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை எனது வழக்கரிஞருக்கு யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து பராமரிப்பதற்கு தாவா சொத்தின் உரிமையாளரிடமிருந்து எழுத்தின் மூலமான அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பேசப்பட்டது. வாதியிடமிருந்து வாடகை பெறுவதாக நான் சொல்வதற்கு எழுத்தின் மூலமான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. வாதியிடமிருந்து பெறும் வாடகைக்கு ரசீது கொடுக்கும் பழக்கம் எனக்கு இல்லை என்றால் சரிதான். முறைப்படி வாடகை தாரரிடமிருந்து வாடகை பெற்ற பின்னர் ரசீது கொடுப்பது சட்டப்படி வழக்கம் என்றால் சரிதான்.

2)எனது முதல் விசாரணையில் தாவா சொத்து பழுதடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் தற்கால அமைப்பை காட்டுவதற்கு புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பழுதடையவில்லை என்றாலும் அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் பொய்யான காரணங்களை கூறி எதிர்வழக்காடுகிறேன் என்றாலும் சரியல்ல. வாதி என்னை சட்ட விரோதமாக தாவா சொத்திலிருந்து வெளியேற்ற கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. வாதி மீது முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 157/2024 என்ற வழக்கை தாவா சொத்திலிருந்து காலி செய்ய தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வாடகையாக மணி ஆர்டர் செய்துள்ளார் என்றாலும் அதை நான் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றாலும் சரிதான். வாடகை தொகையை

குறைவாக அனுப்பினார் . 2 வருடங்களாக வாடகையும் செலுத்தவில்லை . அதனால் தான் திருப்பி அனுப்பினேன்.

3)வாதி வாய்மொழியாக பேசப்பட்ட வாடகையை தான் செலுத்தினார் என்றாலும் நான் கூடுதல் பணத்திற்கு ஆசைப்பட்டு அதை வாங்க மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பராமரிக்கிறேன் என்று சொல்லி அதற்கு பின்னர் அடியாட்கள் துணையுடன் அடிக்கடி தாவா சொத்திற்குள் புகுந்து பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனது ஜமாத்தின் அதிகாரத்தை பயன்படுத்தி காவல் துறையில் பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி தன்னை சட்ட விரோதமாக தாவா சொத்திலிருந்து வெளியேற்ற கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லாததால் என்னால் வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முடியாது என்றால் சரியல்ல. எனக்கு உரிமையாளர் உரிமை கொடுத்துள்ளார்.

4) தாவா சொத்தை சுற்றியுள்ள இடத்தில் முஸ்லீம் மதத்தை சார்ந்தவர்கள் தான் உள்ளார்கள் என்றால் பிற மதத்தை சார்ந்தவர்களும் உள்ளார்கள். தாவா சொத்தில் இந்து மதத்தை சார்ந்தவர்கள் இருப்பதால் அவர்கள் மத வழிமுறைகளை பின்பற்றுவது பிடிக்காததால் தான் தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து இன்று வரை நல்ல நிலையில் உள்ளது தான் என்றாலும் வழக்கிற்காக பழுதடைந்துள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அமைதியான அனுபவத்தை தடையிடர் செய்யதான் நான் மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பை துண்டித்துவிட்டேன் என்றால் சரியல்ல. அவர்கள் சரியாக மின் இணைப்பு கட்டாததால் தான் துண்டிக்கப்பட்டது.

5)தாவா சொத்தில் உரிமையாளர்களும் வாதியும் இணக்கமாக தான் உள்ளார்கள் என்றாலும் நான் தான் தாவா சொத்தை பராமரிக்கிறேன் என்ற பெயரில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர் எனக்கு பவர் கொடுத்தற்காக எந்த

பத்திரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தற்போதும் வாதி ஒப்புகொண்ட வாடகையை செலுத்த தயாராக தான் உள்ளார் என்றாலும் நான் தான் வாங்க மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.25 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.16 15:46:30 +0530